SRI LANKA IMMIGRATION AND EMIGRATION

திகதி: 2021-10-05
இல: 20

# ஊடக அறிவித்தல்
# குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ள வருகைதரும் விண்ணப்பதாரிகளுக்கு இணையத்தளம் ஊடாக நாளொன்றை ஒதுக்கிக்கொள்வதற்கு வசதியளித்தல்

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தின் மூலமும் அதே போன்று மாத்தறை, வவுனியா, கண்டி, குருணாகல் ஆகிய பிராந்திய அலுவலகங்கள் மூலமும் சகல சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளையும் பேணிய வண்ணம் மட்டுப்படுத்தப்பட்ட சேவை பெறுனர்களுக்கு வெளிநாட்டுக் கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய, அத்தியவசிய தேவையுள்ள சேவைப் பெறுனர்கள் மாத்திரம் தங்களுக்கு அண்மையிலுள்ள அலுவலகத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள **இணைய வழியைப் பயன்படுத்தி திகதியொன்றை ஒதுக்கிக்கொண்டு வருகைதருமாறு** அறியத்தருகின்றேன். இவ்வாறு திகதியொன்றை ஒதுக்கிக் கொள்ளாது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வருகை தருவோருக்கு அலுவலக வளாகத்தினுள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

நாளொன்றை ஒதுக்கிக்கொள்ள பின்வரும் இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.
https://eservices.immigration.gov.lk/td

**பத்தரமுல்லை பிரதான அலுவலகத்தினால் ஒரு நாள் மற்றும் சாதாரண சேவை கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகவல்களை அறிந்துகொள்வதற்காக, ;**

| சேவை | திறந்திருக்கும் நேரம் | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்களை ஒப்படைத்தல். | மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணி வரை | 0707101060, 0707101070 |

**பிராந்திய அலுவலகங்கள் ஊடாக சாதாரண சேவை கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கான தகவல்களை அறிந்துகொள்வதற்காக;**

| பிராந்திய அலுவலகம் | திறந்திருக்கும் நேரம் | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| மாத்தறை பிராந்திய அலுவலகம் | மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 1.00 மணி வரை | 041-5412212, 041-5104444 |
| கண்டி பிராந்திய அலுவலகம் | | 081-5624509, 081-5624470 |
| வவுனியா பிராந்திய அலுவலகம் | | 025-5676344, 025-5676345 |
| குருணாகல் பிராந்திய அலுவலகம் | | 037-5550562, 037-5550563 |

**முக்கியமானது:** மேற்குறிப்பிட்ட எல்லா சேவைகளையும் வழங்கும் போது, தற்போதுள்ள தொற்று நோய் நிலவரங்களின் கீழ் அவ்வப்போது **அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்கள், ஊரடங்குச் சட்டம் அமுலாக்கல், சுகாதாரத் துறை மற்றும் பாதுகாப்புப் பிரிவின் தீர்மானங்கள் என்பவற்றுக்கு கட்டுப்பட்டே சேவைகள் வழங்கப்படும்**. அதற்கமைய சேவை வழங்கும் தீர்மானங்களில் அவ்வப்போது மாற்றங்கள் நிகழலாம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**